**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
# Term Examination, November - 2017

| தமிழ் | தரம் :- 12 (2019) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**
**பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் ஒரு வினாவுக்கும் பகுதி III இல் ஒரு வினாவிற்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

1) **பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(i). பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விழிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

அ) இப்பாடலின் பொருளை உமது மொழி நடையில் எழுதுக (04 புள்ளிகள்)
ஆ) நெய்தல் நிலச் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது? (03 புள்ளிகள்)
இ) இப்பாடலில் வெளிப்படும் சங்க இலக்கியப் பண்புகளை விளக்குக. (03 புள்ளிகள்)
(10 புள்ளிகள்)

(ii). மருங்கடை தென்கரை வந்து தோன்றினான்
ஒருங்கடை நெடும்படை ஒல்என் ஆர்ப்பினோடு
அருங்கடை யுகம்தனில் அசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே.

அ) இப்பாடல் இடம் பெற்ற சந்தர்ப்பம் யாது? (03 புள்ளிகள்)
ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது? விளக்குக. (03 புள்ளிகள்)
இ) இங்கு குறிப்பிடப்பட்ட படையை கவிஞர் எவ்வாறு வருணிக்கின்றார்?
(04 புள்ளிகள்)
(10 புள்ளிகள்)

agaram.lk

**2)**

**அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள முதலெழுத்துக்களின் எண்ணிக்கை.
   1. 12  2. 18  3. 30  4. 216  5. 247  (    )

2. பின்வருவனவற்றுள் ‘உ’ கரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படும் சொல்.
   1. பத்து  2. சங்கு  3. அன்பு  4. புரியாது  5. வாழ்வு  (    )

3. தற்காலத் தமிழில் மொழிக்கு இறுதியில் வராத எழுத்துக்களை மட்டும் கொண்ட தொகுதி.
   1. அஇஉ  2. ஆஈஊ  3. ஔஎஓ  4. ஓஎஔ  5. உஎஔ  (    )

4. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கம் இடம் பெற்ற சொல்.
   1. அன்று  2. அல்லி  3. அம்பு  4. அன்பு  5. அஞ்சு  (    )

5. அகராதி ஒருங்கில் அமையாத சொற்றொகுதி.
   1. காகம், கிளி, குயில், கோழி
   2. மலை மேற்கு, மோதகம், மையல்
   3. தென்னை, தேங்காய், தையல், தோப்பு
   4. வீடு, வெண்ணிலா, வைகறை, வௌவால்
   5. பாலை, பூக்கள், பேதம், பையன், பொய்  (    )

6. புற வினாவாக அமையும் சொல்
   1. எவன்  2. எம்மனிதன்  3. யாது  4. எங்கே  5. ஏன்  (    )

7. பின்வருவனவற்றுள் உதட்டுப் பல் ஒலி
   1. ங்  2. ந்  3. ன்  4. ர்  5. வ்  (    )

8. கூட்டுயிர்களாக அமைவன.
   1. இஈ  2. ஆஓ  3. இஐ  4. ஐஔ  5. ஔஉ  (    )

9. பின்வருவனவற்றுள் கிரேக்க மொழிச் சொல்.
   1. அட்டவணை  2. துப்பாக்கி  3. அத்தர்  4. சுருங்கை  5. அலுமாரி  (    )

10. பின்வருவனவற்றுள் காரண சிறப்புப்பெயராக அமைவது.
    1. நாற்காலி  2. முள்ளி  3. ஆலயம்  4. அணி  5. வளையல்  (    )

(10x1=10 புள்ளிகள்)

**ஆ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**
1. சுட்டெழுத்துக்கள் என்றால் என்ன? உதாரணம் தருக.
2. வேற்று நிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.
3. பகுபதம் என்றால் என்ன? அவற்றின் உறுப்புக்களைத் தருக.
4. அளபெடை என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
5. வல்லின மெய்யெழுத்துக்களைக் குறிப்பிட்டு, அவற்றின் இன எழுத்துக்களையும் தருக.

(5x2=10 புள்ளிகள்)

agaram.lk

**3) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்டு கட்டுரை எழுதுக.**

அ) மனித வாழ்வில் சமயத்தின் வகிபாகம்
ஆ) இலக்கியமும் பண்பாடும்
இ) ஊடகங்களின் இன்றைய நிலை.
ஈ) பேராசிரியர் வி. செல்வ நாயகத்தின் தமிழ்ப்பணிகள்
உ) யாதும் ஊரே யாவருங் கேளிர்

(20 புள்ளிகள்)

## பகுதி – II

**4)** திருவள்ளுவர் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற அதிகாரத்தில் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டு,

அ) துணையாகக் கொள்வோரிடம் காணப்பட வேண்டிய பண்புகள். (4 புள்ளிகள்)
ஆ) பெரியாரைத் துணைக் கோடலின் சிறப்பு. (6 புள்ளிகள்)
இ) பெரியாரைத் துணைக் கோடலின் பயன். (4 புள்ளிகள்)
ஈ) பெரியாரைத் துணையாகக் கொள்ளாமையின் குற்றம். என்பவற்றை விளக்குக.
(6 புள்ளிகள்)
(20 புள்ளிகள்)

**5)** பரத சேனை கங்கைக் கரையை அடைந்தது முதல் அதனைக் கண்டு சினங்கொண்ட குகன் தனது படையைக் கூட்டியது வரையுள்ள பகுதியில்,

அ) குகனது சந்தேகம் (5 புள்ளிகள்)
ஆ) குகனது கோபம் (9 புள்ளிகள்)
இ) குகனது படை. (6 புள்ளிகள்)
என்பனபற்றிக் கம்பர் கூறுவனவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

agaram.lk

**6)** மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) கன்று தன் பயமுலை மாந்த…. என்று தொடங்கும் குறுந்தொகைச் செய்யுளில் தோழியின் மதிநுட்பம் புலப்படுத்தப்படுமாற்றை விளக்குக.
ஆ) சிலப்பதிகாரம் ஊர்காண் கதையில் கோவலனின் மனநிலை எடுத்துக்காட்டப்படுமாற்றை விளக்குக.
இ) கோயில் திருப்பதிகத்தில் மணிவாசகர் இறைவனின் பெருமைகளை எவ்வாறு வியக்கிறார்?

(10 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி – III

**7)** அ) சங்ககாலத்தில் எழுந்த புறத்திணை இலக்கியங்களை எடுத்துக்காட்டுக. (4 புள்ளிகள்)
ஆ) அகத்திணை இலக்கியங்களின் தனித்துவமான பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.
(9 புள்ளிகள்)
இ) காஞ்சித்திணை, பாடாண் திணை என்பவற்றை விளக்குக. (7 புள்ளிகள்)
(20 புள்ளிகள்)

**8)** அ) சங்ககாலத்தில் எழுந்த அகத்திணை இலக்கியங்களை எடுத்துக்காட்டுக. (4 புள்ளிகள்)
ஆ) புறத்திணை இலக்கியங்களின் தனித்துவமான பண்புகனைச் சுருக்கமாக விளக்குக.
(9 புள்ளிகள்)
இ) கைக்கிளை, பெருந்திணை என்பவற்றை விளக்குக. (7 புள்ளிகள்)
(20 புள்ளிகள்)